உ



பளை அல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும்
பரந்தன் 5ம் வாய்க்காலை வசித்தவருமாகிய

அமரர் பத்மநாதன்–யோகலட்சுமி அவர்களின்

**31ம் நாள் நினைவாக வெளியிடப்படும்**

# நினைவு மலர்

**06-02-2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அமரர் பத்மநாதன்-யோகலட்சுமி

அவர்களின் 31ம் நாள் நினைவாக வெளியிடப்படும்

# நினைவு மலர்

06-2-2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்வு
26-10-1952

உதிர்வு
07-01-2017

# அமரர் பத்மநாதன்-யோகலட்சுமி
# அவர்கள்

## திதி வெண்பா

**2017ம் ஆண்டு 1ம் மாதம் 6ம் நாள்**
**தசமி திதி தன்னில் நீண்ட பெரும்**
**நெடுந்துயர்கள் நீக்கி மீண்டும் நிறைவோ**
**யோகலட்சுமி நெடுநாளிற் நிலம்**
**வாழ்ந்து இறையடிக்கே சேர்ந்தாள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பண்பின் சிகரமாய் பார்புகழ் அன்னையாய்

அன்பின் ஊற்றாய் அருளுருவாய்

வாழ்விலே கலங்கரை விளக்காய்

வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்

தெய்வமாய், குலமணியாய் மாதர் திலகமாய்

பாசக் கயிற்றால் எம்மைப் பிணைத்தாய்

பேசாது ஓடிப் பெருந்துயர் தந்தாய்

ஈசனடியே இணையற்ற வாழ்வெனப் புகட்டினாய்

மலரின் மணமாய் மனங்களில் நிறைந்தாய்

மலரனைய திருவடிக்குப் படைக்கின்றோம்

கௌரிநாத மலரைக் கண்கலங்கி நின்று.

இங்ஙனம்

பிள்ளைகள்

மருமக்கள்

பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய்புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுடைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனே விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கட லீந்திபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மண்ணிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்துநட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன்
அடியின் கீழிருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பாதிமதிநதி போதுமணி சடை
நாதரருளிய - குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய - மணவாளா
காதுமொரு விழி காகமுறவருள்
மாய னரிதிரு - மருகோனே
காலனெனையணு காமலுனதிரு
காலில் வழிபட - அருள்வாயே
ஆதியயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு - சிறைமீளா
ஆடம் மயிலினி லேறி யமரர்கள்
சூழ வலம்வரு - இளையோனே
சூரனுடலற வாரி சுவறிட
வேலை விடவல - பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# திருமதி பத்மநாதன் யோகலக்சுமி
## அவர்களின்
# வாழ்வில் ஒரு கண்ணோட்டம்

எல்லா வளங்களையும் தன்னகத்தே கொண்ட கிளிநொச்சி நகரம் அதில் வடபால் பனை மரங்களாலும், தென்னை மரங்களாலும் சூழப்பெற்ற ஓர் ஊராம் பளை. அதில் தென்பால் குறிச்சியாம் அல்லிப்பளை இக்கிராமம். நெல் வயல்களாலும், கடலாலும் சூழ்ந்து ஒரு நடுநாயகமாக பிரசித்தி பெற்ற அறத்தி அம்மன் ஆலயத்தையும் படித்த பல மக்களையும் கொண்டு விளங்குகின்றது.

அங்கு வசித்த உயர் வேளாளர் குலத்தினராகிய செல்லப்பா சின்னாச்சிப்பிள்ளை(நாகம்மா) ஆகியோரின் இல்லற வாழ்க்கையில் மூன்றாவது செல்வப் புதல்வியாக இவர் பிறந்தார். இவருக்கு யோகலக்சுமி என்று பெயர் சூட்டி சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தனர்.

இப்படியிருக்கையில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகையில் பள்ளிப் பருவத்தை அடைந்தார். பெற்றோர்கள் இவரை ஆரம்பப் பாடசாலையான சி.சி. சக பாடசாலையில் சேர்த்தார்கள்.இவர் அங்கு சுறுசுறுப்புடனும் மிக விருப்புடனும் கல்வியை கற்று பின் உயர் வகுப்பை மத்திய கல்லூரியில் சேர்ந்து ஆர்வத்துடன் O/L வரை கற்றார். இவருக்கு திசைவீரசிங்கம், யோகநாதன்(இத்தாலி) புனிதவதி, கிருஷ்ணவேணி, புஸ்பஞானதேவி, உதயதேவி (சுவிஸ்), செல்வரூபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இத்தாலி) ஆகியோர் சகோதரர்களாகக் கிடைக்கப் பெற்றனர்.

இவர் மணப்பருவம் அடைந்தவுடன் இவரது இருபத்தோராவது வயதில் பரந்தன் 5ம் வாய்க்காலைச் சேர்ந்த நாகலிங்கம் இராசம்மா தம்பதிகளின் நான்காவது மகனாகிய பத்மநாதன் (பரந்தன் இரசாயனக் கூட்டுத் தாபனம்) என்பவரைத் திருமணம் முடித்து வைத்தனர். இவர்களது இன்பமான வாழ்வில், மூன்று ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தனர். இவரின் கடைசி மகள் பிறந்து ஆறு மாத குழந்தையாக இருக்கும்போது இவரின் கணவன் காலமாகிவிட்டார்.

இவரின் கணவரின் இழப்பிற்கு பிறகு பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பு தனதென மனதில் தைரியத்தையும் விடாமுயற்சியையும் கொண்டு தன்னாலான தொழில் முயற்சிகளை செய்து மற்றவர்களிடம் எந்த உதவியும் பெறாமல் தன் பிள்ளைகளை சிறந்தவர்களாகவும், அறிவாளிகளாகவும் வளர்த்து மூத்த மகனை பிரான்ஸ் நாட்டிற்கும் இரண்டாவது மகனையும் மூன்றாவது மகனையும் இத்தாலி நாட்டிற்கும் அனுப்பி சீரும் சிறப்புமாக வாழ்ந்து வரும் காலத்தில் மகன்மார் திருமண வயதை அடைந்தவுடன் முதல் மகன் சுதாகரனுக்கு கிருபாலினியையும் இரண்டாவது மகன் லிங்கேஸ்வரனுக்கு தமிழினியையும் மூன்றாவது மகன் அகிலேஸ்வரனுக்கு ஜெயறூபியையும் மணம் முடித்து வைத்தார்.

தன் கடைக்குட்டி மகளுக்கு தன் சொந்த மருமகனான சுரேஸ்காந்தனையும் மணம் முடித்து வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடனேயே தானும் வசித்து வந்தார். போர்ச்சூழல் காரணமாக பிள்ளைகளை பிரிந்து காணமல் செல்லும் நிலைமை ஏற்பட்டு பின் 6 மாதத்தால் பிள்ளைகளுடன் சேர்ந்து சில காலம் வவுனியாவில் வசித்தார். போர் முடிந்த காலத்தில் திரும்பவும் பரந்தன் 5ம் வாய்க்கால் இல்லத்திற்கு மகளுடன் வந்து வசித்து வந்தார்.

அருகில் உள்ள பிள்ளையார் ஆலயத்திற்கு தினமும் சென்று வணங்கி வருவார். அருகில் இருக்கும் உறவினர்களிடம் அளவளாவி மகிழ்ந்திருப்பார். இப்படி வாழ்ந்து வரும் நாளில் திடீரென நோய்வாய்ப்பட்டு கிளிநொச்சி மருத்துவமனையில் வைத்தியம் பார்த்து எதுவும் பயனளிக்காத நிலையில் வீடு வந்து மகளிடம் தனக்கு விருப்பமான உணவுகள் தயாரித்து தரும்படி கேட்டு வாங்கிச் சாப்பிட்டு பின் இரண்டு தினங்களில் மருமகன் சுரேஸை தனக்கு விருப்பமான மதிவெடி என்று கூறும் உணவை வாங்கி வரும்படி அனுப்பிவிட்டு மகள் சுவர்ணாவின் மடியில் தலை வைத்து தன் ஆவியை பிரித்துக் கொண்டு தான் விரும்பிய இளையமகன் அகிலேஸ்வரனிடம் முறைப்படி தனது இறுதிக் கிரியைகளைப் பெற்று ஆத்மா சாந்தியடைந்தார்.

சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# சிவபுராணம்

திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

நமச்சி வாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடியோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்றஇத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெருமானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்மை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



குமரகுருபர சுவாமிகள்

*அருளிச் செய்த*

# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக் கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒளித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே! (1)

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே! (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ?
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே! (3)

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே! (4)

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமேன்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட் கமலத்து
தஞ்சத் துவசம் உயர்ந்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே! (5)

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே! (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்காய்
உளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே! (7)

சொல்விற் பனமும் அவதானமும்
கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக்கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே
சகல கலாவல்லியே! (8)

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே! (9)

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வ முளதோ?
சகல கலாவல்லியே! (10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் துணை

# கந்த சஷ்டி கவசம்



### காப்பு

### நேரிசை வெண்பா

**துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம்**

**நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்**

**நிஷ்டையுங் கைகூடும் நிமல ரருள்கந்தர்**

**சஷ்டி கவசந் தனை.**

### குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### நூல்

ச‘டியை நோக்கச் சரவண பவனார்
சி‘டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட
மைய நடனஞ்செய்யும் மயில் வாகனனார்
கையில்வேலால் எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்குகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ சணமும் பதக்கமுந் தரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காகக்
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத்தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக்கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனை வரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதூ தாரெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டதுவோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட வி'ங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய வி'ங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை'யங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப்பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன்நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திடவருள்செய்
கந்தர் ச'டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் ச'டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவார்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறித்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயிநட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்துப் பிள்ளையார் அருளிய
# உடற்கூற்று வண்ணம்

### குறிப்புச் சந்தம்

தனதனதான தனதனதான
தந்ததனந்தன தந்ததனந்த
தனதனந்த தனனதனந்த
தானன தானன தானனதந்த
தந்ததனதான தனதானனா

ஒருமடமாதும் ஒருவனும் ஆகி
இன்பசுகம்தரும் அன்புபொருந்தி
உணர்வுகலங்கி ஒழுகியவிந்து
ஊறுசுரோணித மீது கலந்து
பனியில் ஓர்பாதி சிறுதுளிமாது
பண்டியில் வந்துபுகுந்துதிரண்டு

பதுமம் அரும்பு கமடம்இதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகள் என்ற
உருவமும்ஆகி உயிர்வளர்மாதம்
ஒன்பதும்ஒன்றும் நிறைந்துமடந்தை
உதரம் அகன்றுபுவியில் விழுந்து
யோகமும்வாரமும் நாளும் அறிந்து

மகளிர்கள்சேனை தர அணை ஆடை
மண்டபஉந்திட உதைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை அமுத அருந்து
ஓர் அறிவுஈர் அறிவு ஆகிவளர்ந்து
ஒளிநகைஊறல் இதழ்மடவாரும்
உவந்துமுகந்திட வந்துதவழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடியில் இருந்து மழலைமொழிந்து
வாஇருபோஎன நாமம்விளம்ப
உடைமணி ஆடை அரைவடம்ஆட
உண்பவர்தின்பவர் தங்களொடு உண்டு
தெருவில் இருந்து புழுதி அளைந்து
தேடியபாலரெலாடு ஓடிநடந்து

அஞ்சு வயதாகி விளையாடியே
உயர்தரு ஞானகுருஉபதேச
முத்தமிழின் கலையும் கரைகண்டு
வளர்பிறை என்று பலரும் விளம்ப

வாழ்பதினாறுபி ராயமும் வந்து
மயிர்முடிகோதி அறுபத நீல
வண்டு இமிர்தண்தொடை கொண்டைபுனைந்து
மணிபொன்இலங்கு பணிகள் அணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க

மதனசொரூபன் இவன்எனமோக
மங்கையர்கண்டும ருண்டுதிரண்டு
வரிவிழிகொண்டு சுழியஎறிந்து
மாமயில்போல் அவர் போவது கண்டு

மனதுபொறாமல் அவர்பிறகுஓடி
மங்கலசெங்கல சந்திகழ்கொங்கை
மருவமயங்கி இதழ்அமுதுண்டு
தேடியமாமுதல்சேர வழங்கி

ஒருமுதல்ஆகி முதுபொருளாய்இ
ருந்ததனங்களும் வம்பில்இழந்து
மதனசுகந்த விதனம்இது என்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமையும் மாறி இளமையும்மாறி
வன்பகல்விழுந்துஇரு கண்கள் இருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாத விரோத குரோதம் அடைந்து
செங்கையினில் ஓர்தடியும் ஆகியே

வருவது போவதுஒரு முதுகூனு
மந்திஎனும்படி குந்திநடந்து
மதியும் அழிந்துசெவி திமிர்வந்து
வாய்அறியாமல் விடாமல் மொழிந்து

துயில்வரும் நேரம் இருமல்பொறாது
தொண்டையும் நெஞ்சும் உலாந்துவறண்டு
துகிலும்இழந்து சுணையும் அழிந்து
தோகையர்பாலர்கள் கோரணிகொண்டு

கலியுகம்மீதில் இவர்மரியாதை
கண்டிடும் என்பவர் சஞ்சலம்மிஞ்ச
கலகலஎன்று மலசலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து

தெளியும்இராமல் உரைதடுமாறி
சிந்தையும் நெஞ்சம் உரைந்துமருண்டு
திடமும் அழிந்துமிகவும் அலைந்து
தேறிநல் ஆதரவுஏது எனநொந்து

மறையவன்வேதன் எழுதியவாறு
வந்ததுகண்டமும் என்றுதெளிந்து
இனியென கண்டம் இனிஎனதொந்தம்
மேதினிவாழ்வு நிலாதினிநின்ற
கடன்முறைபேசும் எனஉரைநாவு
தங்கிவிழுந்துகை கொண்டு மொழிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைவழிகஞ்சி ஒழுகிடவந்து
புதமுநாலுசுவாசமும் நின்று
நெஞ்சுதடுமாறி வரும்நேரமே

வளர் பிறைபோல எயிறும்உரோம
மும்சடையும் சிறுகுஞ்சியும்விஞ்ச
மனதும்இருண்ட வடிவும் இலங்க
மாமலைபோல்யம தூதர்கள் வந்து

வலைகொடுவீசி உயிர்கொடுபோக
மைந்தரும் வந்து குனிந்தழநொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரே இவர் காலம் அறிந்து

பழையவர்காணும் எனும் அயலார்கள்
பஞ்சுபறந்திட நின்றவர்பந்தர்
இடும்எனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியும் என்று

பலரையும் ஏவி முதியவர்தாம்
இருந்தசவம்கழுவுஞ்சிலர் என்று
பணிதுகில் தொங்கல் களபம் அணிந்து
பாவகமே செய்துநாறும் உடமை

வரிசைகெடாமல் எடும்எனஓடி
வந்துஇளமைந்தர் குனிந்துசுமந்து
கடுகிநடந்து கடலை அடைந்து
மானிடவாழ்வென வாழ்வென நொந்து

விறஇடைமூடி அழல் கொடுபோட
வெந்துவிழுந்து முறிந்துநிணங்கள்
உருகிஎலும்புகருகி அடங்கி
ஓர்பிடிநீறும் இலாத உடம்பை
நம்பும் அடியேனைஇனி ஆளுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் புலம்பல்

அன்புடனும் ஆசையுடனும் எமை
வளர்த்த எம் இனிய அம்மாவே
எமை விட்டு எட்டாத சென்றதேனோ
நாம் இதயத்தால் அழுகின்றோம்
சென்ற வழி பார்த்திருக்கின்றோம்
மகனே மகளே என்று மார்போடு
அணைப்பதற்கு எங்குதான் சென்றீரம்மா
எமை மறந்து உமது மூன்று ஆண்
மக்களும் உமை வெளிநாடு அழைப்பதற்கு
காத்திருக்க நீர் சென்று மறைந்ததேனோ
அம்மா நான் உங்கள் மகள் கதறுவது
கெட்கவில்லையா அம்மா! நீங்கள்
சென்ற திசை எதுவம்மா தெரியவில்லை
எனக்கு ஆனாலும் அம்மா வழிமேல்
காத்திருக்கின்றேன் அம்மா விழிநீருடன்.

**சுதாகரன்,**

**லிங்கேஸ்வரன்,**

**அகிலேஸ்வரன்,**

**சுவர்ணா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

அன்பான மாமியே
எமை விட்ட ஏன் மறந்தீர்
உமை இழந்து நாமும்
இப்புவியில் வாடுகின்றோம்
உம்மக்கள் போலெம்மை
உடனிருந்து காத்தீரே
நாமும் அத்தையாக எண்ணாது
அம்மாவாக போற்றினோமே
காலமெல்லாம் எம்மை
களிப்புடனே வாழ வைத்தீர்
உருகி மனம் வாடுதே மாமி
உம் பிரிவை தான் எண்ணி
எம் கண்கள் நீர் சொரிகின்றன
நான் உம்முடன் இருந்த
காலத்தில் என்ககு: அறுசுவை உணவு
தயாரித்து தந்தீரே! உங்கள் உயிர்
போகும் தருணத்திலும் சுரேஸ் சுரேஸ்
என்று அழைததுத்தான் உங்கள் ஆவி பிரிந்ததுவே.

**கிருபாலினி,**
**தமிழினி,**
**ஜெயறாபி,**
**சுரேஸ்காந்தன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர்கள் கண்ணீர்த்துளிகள்

எம் அக்காவே அன்புறவே
ஊர் போற்ற வாழ்ந்தவரே
ஊர் அழவே சென்றதேனோ
நாம் வெளிநாட்டில் இருக்கும்போது
வந்ததே இடிவிழுந்ததுபோல் ஒரு செய்தி
நாம் துவண்டு விட்டோம் அக்கா
நாம் நம்பவில்லை இக் கொரூரமான
செய்தியை அக்காவின் உயிரான
முகத்தைத்தான் பார்க்க என்று கடல் பல கடந்து
ஓடி வந்தோம் வந்து பார்த்தவுடன்
தான் உங்கள் உயிரற்ற உடலைக்
கண்டோம் கதறிக் கதறி அழுகின்றோம
கேட்கலையோ அக்கா நீங்கள் இனி
எப்போ திரும்பி வருவீர்கள்
என விழிநீருடன் காத்திருக்கின்றோம்
அக்கா நீங்கள் எப்படி எல்லாம்
எங்களை எல்லாம் அம்மாவின் இடத்தில்
இருந்து வளர்த்தீர்கள் எங்கட்கு
ஏதும் நோய் வந்தால் தாங்கமாட்டீர்களே
நாங்களும் எப்படி அக்கா உங்களை
பிரிந்து வாழ்வது உங்கள் ஒரு
பெண் பிள்ளையையும் தவிக்க விட்டு
எங்கு சென்று விட்டீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கொடியில் பூத்த மலர்கள்போல்
ஒன்றாக நாம் வளர்ந்தோம்
சகோதரியே நீ சென்ற இடம்
புரியாமல் அழுகின்றோம்
காலம் உள்ள வரை உடனிருப்பீர்கள்
என நினைத்தோம்
நீங்கள் பாதியில் போக
எப்படி மனம் வந்தது சகோதரியே
பரம்பரை பேசும் ஆணிவேர்
பாதியில் அறுத்ததேனோ
புரியாமல் தவிக்கின்றோம்.

**சகோதரர்கள்**

---

## உயிரினமும் அறிவும்

**ஓரறிவு** - தொடுவுணர்வு மட்டுமே இருக்கும்.
**(புல், மரம்)**

**ஈரறிவு** - தொடுவுணர்வு, சுவையுணர்வு
**(நத்தை, சிப்பி, சங்கு)**

**மூவறிவு** - தொடுகை, சுவை, நுகர்வு
**(எறும்பு, கறையான்)**

**நாலறிவு** - தொடுகை, சுவை, நுகர்வு, பார்வை
**(தும்பி, வண்டு)**

**ஐந்தறிவு** - தொடுகை, சுவை, நுகர்வு, பார்வை, கேட்டல்
**(பறவைகள். விலங்குகள்)**

**ஆறறிவு** - தொடுகை, சுவை, நுகர்வு, பார்வை, கேட்டல், பகுத்தறிவு **(மனிதன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

எங்கள் பாசமிகு அம்மம்மாவே அப்பம்மாவே
இனி அம்மம்மா அப்பம்மா என்று
கூப்பிட யார் இருக்கிறார்கள்
உங்களைப் போல எமக்கு ஒரு
அம்மம்மா அப்பம்மா கிடைக்குமா
ஆசையுடன் வளர்த்த அம்மம்மா அப்பம்மாவே
எட்டாத தேசம் சென்றதேனோ
இதயத்தால் அழுகின்றோம் எங்களை
மார்போடு அணைப்பதற்கு இனி யாரிடம்
போவோம் இனிய மொழி பேசி
எம்மை எல்லாம் சிரிக்க வைக்கும் காலம்
இனிமேல் வாராதோ அம்மம்மாஅப்பம்மா
நாங்கள் உங்களைத் தேடி நிற்கும்போது
எங்கள் அப்பா கூறினார் நீங்கள்
சாமியிடம் போய்விட்டதாக!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர் மைத்துனிமார் புலம்பல்

ஆருயிர் மைத்துனியே எமை எல்லாம்
அன்போடு வரவழைத்து ஆதிரிக்கும்
ஆருயிரே! பண்பாய் பேசிடுவாய்
பல அறிவு கூறிடுவீர்
நித்தம் உன் புன்சிரிப்பால்
பூரிப்படையும் எங்கள் முகம்
உயிர் பிரிந்து வாடிய உம் முகத்தைக் கண்டு
சொல்லமுடியாத துயர் கொண்டதம்மா
உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்கின்றோம்.

## உற்றார் உறவினர் புலம்பல்

துன்பம் வந்த போதெல்லாம் துடித்து
உதவி வந்தீர்கள் யோகம்மா
இன்பங்கள் சூழ்ந்து வந்தால் இணைந்து
எம்மை மகிழ வைப்பீர்கள்
நல்லது கெட்டதுகளை பிரித்தறிய செய்திடுவீர்
அயராது நீர் செய்த தொண்டை நாமும் மறப்போமா?
வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தி வேண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய தாயார் கண்ணீர்த்துளிகள்

மகளே எம் பெறாமகளே!
உமது தாயார் இறைவனடி சேர்ந்தபின்
உம்மையும் உமது சகோதரங்களையும்
என் பிள்ளைகள் போல் காத்து வந்தேனே
நீங்களும் என்னை சின்னம்மா என்று
கருதாமல் தாயாக எண்ணினீர்களே
உம் அருமை உறவுகள் கலங்கி கதறி நிற்க
நீர் மட்டும் எமைப் பிரிந்து சென்றதேனோ
மூத்தவளாக வந்த நீ எங்கள் முத்து அம்மா
உம் சகோதரங்கள் நன்றாக வாழ பாடுபட்டாய் மகளே
சித்தம் குளிர எம் சிந்தனையில் நின்றாய்
பெத்த மனம் நோக பிரானடி சேர்ந்தாயே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழவகைகளும் இவற்றை உண்பதால் அடையும் பலாபலன்களும்

**அன்னாசிப்பழம் :**

அஜீரணம், மலக்கட்டு, இருமல், வாய்நாற்றம், வாதநோய் என்பவற்றை நீக்கும். உடம்பு, எலும்பு, பல் போன்றவற்றைப் பலப்படுத்தும்.

**அப்பிள்பழம் :**

தாகம், உடல்வரட்சி, வயிற்று அழற்சி போன்றவற்றை நீக்கும். குடல்புண், பேதி, இரத்தபேதி, தள்ளுமூலம், வயிற்றுப்புண், வாய்ப் புண் போன்றவற்றைக் குறைக்கும்.

**இலந்தைப்பழம் :**

வாந்தியை நிறுத்துவதுடன் உடலுக்கு வலுவைக் கொடுக்கும்.

**எலுமிச்சம்பழம் :**

வாந்தி, மயக்கம், பித்தம், வயிற்றுப்புண், வாயுக் கோளாறு, மூலக்குத்து, வயிற்றுப்போக்கு, இருமல், சிறுநீரகநோய், வயிற்றுவலி, வாய்நாற்றம், பல் ஆட்டம், தூக்கமின்மை, கண்நோய் போன்றவற்றை நீக்கும்.

**கொய்யாப்பழம் :**

வயிற்றுப்புண், மலக்கட்டு, வயிற்றுக்கோளாறு, இருதய படபடப்பு, தோல் கோளாறு என்பவற்றை நீக்கும். மூளை, எலும்பு, உடல் என்பன பலமடையும்.

**தக்காளிப்பழம் :**

உடல்வரட்சி, வயிற்றுப்புண், மலச்சிக்கல், சிறுநீரகக் கோளாறு போன்றவற்றைக் குணமாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புளியம்பழம் :**

பித்தசுரம், மயக்கம், மூர்ச்சை, குணமாகும், நரை, சன்னி, , பாதசுரங்கம், மந்தபுத்தி குணமாகும்.

**மங்குஸ்தான்பழம் :**

குடல்புண், வயிற்றுவலி, வாய்நாற்றம், உடல்வரட்சி, மூலநோய், இரத்தமூலம், மூலப்புண், சூதகவலி, கண்ணெரிவு, கணைச்சூடு, பித்தம், குமட்டல், அன்னதோஷம், இருமல் போன்றவற்றை குணமாக்கும். சிறுநீர்ப்பையைச் சுத்தப்படுத்தும்.

**மாதுளம்பழம் :**

வாய்நாற்றம், வயிற்றுப்புண், அன்னதோஷம், தொண்டைக்கட்டு, மூல எரிவு, நீரிழிவு, ஆஸ்மா, தொண்டைக் கரப்பன், சீதபேதி, வாய்வுப்பிடிப்பு, இரத்தச்சோகை, பாண்டுரோகம், பெருவயிறு, வாந்தி, மந்தம், நெஞ்செரிவு, காதடைப்பு, மயக்கம், பித்தம், மலச்சிக்கல் போன்றவற்றைக் குணமாக்கும். ஞாபக சக்தியை உண்டாக்கும். இருதயத்திற்கு பலம் தருவதுடன் உடல் குளிர்ச்சி பெறும்.

**மாம்பழம் :**

மலக்கட்டு. மலட்டுத்தன்மை, சொறி சிரங்கு, தேடல், முக வரட்சி, வாய்நாற்றம், சிறுநீர்க்கல், பற்கோளாறு போன்ற வற்றைக் குணப்படுத்தும். உமிழ்நீரைச் சுரக்கச் செய்வதுடன் மூளை, இருதயம் பலமடையும். ஆண்மை, பெண்மை மிகுதியாகும். மாத விலக்கை ஒழுங்காக்கும்.

**தோடம்பழம் :**

சூடு, குடல்வரட்சி, தாகம், மலக்கட்டு, கணச்சூடு, தலைச்சுற்று, சொறி சிரங்கு, பல் கோளாறு போன்றவற்றைக் குணமாக்கும். மேனியை அழகாக்கும். உடலை வளர்ப்பதுடன் கூடிய சக்தியையும் கொடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திராட்சைப்பழம் :

பித்தக் கோளாறு, மலச்சிக்கல், வாதம், உடல்சூடு, கபம், வயிற்றுப்புண், மூலப்புண், நாவரட்சி, நீர்ச்சூடு, வாய்நாற்றம், தொண்டைப்புண் போன்றவற்றைக் குணமாக்கும். முகம் அழகுபெறும்.

### நாவற்பழம் :

நீரிழிவு, வயிற்றுப்புண், வாய்ப்புண், வாய்நாற்றம், இருமல், வாய்வு, சிறுநீரகக்கோளாறு போன்றவற்றைக் குணமாக்கும். கடுத்தல், சீதாவாதநோய் உள்ளபோது விலக்க வேண்டும்.

### பப்பாளிப்பழம் :

மலக்கட்டு, கண்நோய், வாய்நாற்றம், தொண்டைப்புண், வயிற்றுப்புண், பல் சம்பந்தமான கோளாறுகள், கர்ப்பம் தொடர் பான நோய்கள் என்பவற்றைக் குணமாக்கும். யானைக்கால் வீக்கம் குறையும். உடம்பு, மூளை வலிமை பெறும். ஆண்மை, பெண்மை நிறையும். நோய் எதிர்ப்பு சக்தியை உண்டுபண்ணும்.

### பலாப்பழம் :

மூளை வளருவதுடன் அறிவையும் விருத்தி செய்யும். இதை பசுநெய், தேன் என்பவற்றுடன் சேர்த்து உண்டால் களைப்பு, இருமல் என்பவற்றை நீக்கும். அதிகம் உண்ணுவது நல்லதல்ல.

### பாலைப்பழம் :

கருங்கரப்பன், கிரந்தி என்பன நீங்கும். இப்படி விதையில் இருந்து எண்ணைய் எடுத்து கைகால்களுக்குப் பூசிவர கைகாலின் கரடு முரடு நீங்கும்.

### வாழைப்பழம் :

இதை ஏழைகளின் அப்பிள் என்று சொல்வார்கள். தினசரி ஒரு வாழைப்பழம் சாப்பிட்டால் ஆயுள் விருத்தியாகும் நரம்பு வலிமை பெறும். முகம் அழகுறும். மலச்சிக்கல் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவக் குறிப்புகள்

**1. எலும்புகள் உறுதியாய் இருக்க:-** ஒருநாள் விட்டு ஒருநாள் அதிகாலை வேளையில் வெறும் வயிற்றில் மாதுளம் பழத்தைச் சாப்பிட்டு வந்தால் எலும்புகள் நன்கு உறுதிப்படும்.

**2. கால் வெடிப்பு குணமாக:-** மருதோன்றி இலைகளைப் பறித்து வந்து சுத்தம் செய்து எலுமிச்சம் பழத்தின் சாற்றைவிட்டு நயமாக அரைத்து காலில் வெடிப்புள்ள இடங்களில் தடவி வந்தால் வெடிப்புக் குணமாகும்.

**3. தொண்டைக் கரகரப்புக் குணமாக:-** மருதோன்றி இலைகளைப் பறித்து கழுவிச் சுத்தம் செய்து நீரில் போட்டு ஊற வைத்திருந்து, பின்னர் அந்த நீரால் வாயைக் கொப்பளித்தால் தொண்டைக் கரகரப்புக் குணமாகும்.

**4. கல்லீரல், மண்ணீரல் நோய் குணமாக:-** மருதோன்றிச் செடியின் பட்டைகளை எடுத்து நீரில் ஊற வைத்து அந்த நீருடன் சிறிது தேனைக் கலந்து காலை, மாலை என ஒரு நாளைக்கு இரு வேளை பருகி வந்தால் கல்லீரல், மண்ணீரல் ஆகியவற்றுடன் தொடர்பான நோய்கள் குணமாகும்.

**5. மேகச்சூடு, ஆசனக்கடுப்புக் குணமாக:-** துத்திக் கீரையைத் தண்ணீரில் போட்டு வேக வைத்து அதன் சாற்றைப் பிழிந்து அத்துடன் சிறிது பாலையும் கலந்து சிறிது சர்க்கரை சேர்த்துக் கலந்து சாப்பிட்டு வந்தால் மேகச்சூடு, ஆசனக் கடுப்பு குணமாகும்.

**6. நினைவாற்றல் பெருக:-** பப்பாளிப் பழத்தை நாள் தோறும் சிறிதளவு (நிறையச் சாப்பிடக்கூடாது) சாப்பிட்டு வந்தால் நினைவாற்றல் பெருகும். மாதுளம் பழத்தை அடிக்கடி சாப்பிட்டாலும் நினைவாற்றல் பெருகும்.

**7. கொழுப்புச் சத்தைக் குறைக்க:-** கொழுப்புச் சத்து அதிகமாக உள்ளவர்கள், கொழுப்புச் சத்துள்ள பொருள்களை அதிகமாக உண்பதைத் தவிர்ப்பது மட்டுமன்றி, காலை வேளையில் தினமும் பூண்டுசாப்பிட்டால் கொழுப்புச் சத்துக் குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8. வாய் நாற்றம் நீங்க:-** ஒரு மண் சட்டியில் 20 கிராம் படிகாரத்தைப் போட்டு சிறிது தண்ணீர் விட்டு அந்தத் தண்ணீரில் சிறிதளவு உப்பையும் போட்டு அந்தத் தண்ணீரால் தினசரி வாயைக் கொப்பளித்து வந்தால் வாய் நாற்றம் நீங்கும்.

வாய் நாற்றம் உள்ளவர்கள் தினமும் காலையில் எழுந்து பல் துலக்கியதும் வெறும் வயிற்றில் அரை லீற்றர் அளவுக்கு தண்ணீரைப் பருகிவிட்டு எலுமிச்சம் பழச்சாற்றில் தண்ணீர் கலந்து அதனால் வாயைக் கொப்பளித்து வந்தால் நாற்றம் அகலும்.

**9. நெஞ்சுவலி குணமாக:-** அகத்திக் கீரையை நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்து, நிழலில் உலர்த்தி எடுத்து சன்னமாக இடித்துத் தூள் செய்து எடுத்து வைத்துக் கொண்டு நாள் தோறும் காலை மாலை இரு வேளையும் இரண்டு தேக்கரண்டி தூளை வெந்நீரில் கலக்கிக் குடித்து வந்தால் நாளடைவில் நெஞ்சுவலி குணமாகும்.

ஒரு தேக்கரண்டி இஞ்சிச் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி தேன் சேர்த்துக் கலந்து அடிக்கடி பருகி வந்தால் இதயம் சம்பந்தமான எவ்விதமான கோளாறுகளும் ஏற்படாதிருக்க உதவும்.

**10. இருமல் குணமாக:-** உடல் உஷ்ணமாவதன் காரணமாகச் சிலருக்கு வறட்டு இருமல் ஏற்பட்டுத் தொல்லை தரும். இந்தத் தொல்லை உள்ளவர்கள் இரண்டு வெங்காயங்களை நசுக்கி, சாறு பிழிந்து மோருடன் கலந்து காலை, மாலை இரு வேளை பருகி வந்தால் வறட்டு இருமல் குணமாகும்.

கடுக்காய், சிற்றரத்தை ஆகிய இரண்டையும் மண் சட்டி ஒன்றில் போட்டுச் சிவக்க வறுத்தெடுத்து, தூள் செய்து வைத்துக் கொண்டு இருமல் வரும் நேரங்களில் அரைத் தேக்கரண்டி தூளை எடுத்து வாயில் போட்டுக் கடவாய்ப் பகுதியில் அடக்கிக் கொண்டு, சாற்றை மட்டும் உள்ளே இறக்க வேண்டும். இப்படிச் செய்தால் வறட்டு இருமல் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நன்றி நவில்

எமது குடும்ப விளக்கு

**அமரர்**

## திருமதி பத்மநாதன் யோகலக்சுமி

அவர்கள் **07-01-2017** அன்று எமைவிட்டு சிவபதப்பேறு எய்திய செய்தி கேட்டு ஓடோடி வந்து எம்துயரில் பங்கெடுத்து உதவிகள் புரிந்த, தொலைபேசி தந்தி மூலம் இரங்கல் தெரிவித்தோருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகள் நடாத்திய அந்தணப் பெரியோர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களிற்கும் மலர்வளையம் சாத்தியவர்களிற்கும், துண்டுப் பிரசுரம் வெளியிட்டவர்களிற்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களிற்கும், எமது இல்லத்தில் நடைபெற்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டவர்களுக்கும், அத்துடன் இம்மலரினை அச்சிட்ட அச்சகத்தாருக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



இங்ஙனம்

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**அமரர் செல்லப்பா சின்னாச்சிப்பிள்ளை**

↓

கைலாயபிள்ளை-அமரர்
சுப்பிரமணியம் - அமரர்
யோகலட்சுமி -அமரர்
திசைவீரசிங்கம் - பளை
யோகநாதன் - இத்தாலி
புனிதவதி - இத்தாலி
கிருஸ்ணவேணி-சுவிஸ்
புஸ்பஞானதேவி-லண்டன்
உதயதேவி -சுவிஸ்
தங்கராசா -அமரர்
செல்வரூபி -இத்தாலி

**அமரர் நாகலிங்கம் இராசம்மா**

↓

இலட்சுமிஅம்மா
சண்முகநாதன்
பதமநாதன் அமரர் (இரசாயன கூட்டுத்தாபனம் பரந்தன்)
இராசமணி
சிவராசா
மனோகரி
புஸ்பராணி
லோகேஸ்வரன்
அரசரத்தினம்

சுதாகரன்
+
கிருபாழினி
(பிரான்ஸ்)
↓
சரண்யா
எமா
எமிலி
சிசான்

லிங்கேஸ்வரன்
+
தமிழினி
(இத்தாலி)
↓
யதுர்சன்
அபிதர்சன்

அகிலேஸ்வரன்
+
ஜெயரூபி
(இத்தாலி)
↓
ராகுல்
ஆரூஸ்

சுவர்ணா
+
சுரேஸ்காந்தன் (தபால் ஊழியர் பரந்தன்)
↓
கயலரசி
பிரியங்கா (அமரர்)
தனுசன்
அஸ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றவருடையதாகின்றது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஸ்ணர்-



Multy Colours Printers
0775562963

தமிழ்-01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org